www.usefuldesk.com

No. of Printed Pages : 8

212036

**8711**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் இரண்டாம் தாள்

# Language — Part I — TAMIL — Paper II

(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)

நேரம் : 2½ மணி ]  [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (i) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப் பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(ii) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது.

(ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும்.

(iii) வினா எண் 38-க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப் பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பகுதி - 1

கொடுக்கப்பட்டுள்ள **மூன்று** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 5x1=5

**1.** வளையல் – இச்சொல்லில் ஐகாரம் ________ மாத்திரை குறைந்து ஒலிக்கிறது.

(அ) ஒரு  (ஆ) அரை  (இ) ஒன்றரை

**2.** ‘மாடு கன்றை ஈன்றது’ இத்தொடரில் ‘மாடு’ என்பது ________ குறிக்கும்.

(அ) பசுவைக்  (ஆ) காளையைக்  (இ) கன்றைக்

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com



3. கருமை + குழி என்பது ________ எனும் விதிகளின்படி புணரும்.
(அ) ஆதிநீடல், இனமிகல்
(ஆ) தன்னொற்றிரட்டல், இடையுகரம் 'இ' ஆதல்
(இ) ஈறுபோதல், இனமிகல்

4. சித்திரை, வைகாசி ஆகிய இரண்டும் ________ காலத்திற்குரியன.
(அ) முன்பனி (ஆ) பின்பனி (இ) இளவேனில்

5. அகத் திணைகள் ________ வகைப்படும்.
(அ) ஐந்து (ஆ) ஏழு (இ) பன்னிரண்டு

## பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக. 5x1=5

6. சொல்லுக்கு இடையிலும் இறுதியிலும் ________ வாராது.

7. பின்வருநிலையணி ________ வகைப்படும்.

8. மான் ________ மருளும் பார்வை.

9. வெண்பாவின் ஓசை ________ ஆகும்.

10. நன்னூல் கிடைக்குமா ? எனக் கடைக்காரரிடம் கேட்பது ________ வினா.

## பகுதி - 3

சுருக்கமாக விடையளிக்கவும். 10x1=10

11. ஓரெழுத்து ஒரு மொழியில் வல்லினம் மிகும் – இதற்கு சான்று தருக.

12. உவமையை உருவகமாக மாற்றுக – 'விற்புருவம்'

13. 'கிளி கல்லால் அடிபட்டது' – உணர்ச்சித் தொடராக மாற்றுக.

14. தொகைச் சொல்லை விரித்து எழுதுக – 'நானிலம்'.

www.usefuldesk.com

www.usefuldesk.com

www.usefuldesk.com



15. உவமையைச் சொற்றொடரில் அமைக்கவும்.
பசுமரத்தாணி போல.

16. ஒருமை பன்மை பிழைகளை நீக்கி எழுதுக.
பெண்கள் எல்லாத் துறையிலும் பணிபுரிகின்றாள்.

17. சந்திப்பிழையின்றி எழுதுக.
வள்ளலார் அருளிய வழிகளை கடைபிடித்து
ஒழுகினால் மனிதநேயம் மலரும்.

18. பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.

19. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக.
நான் திருக்குறளில் ஆர்வம் மிகுதி.

20. பொருத்தமான நிறுத்தற் குறியிட்டு எழுதுக.
ஒழுக்கமுடைமை குடிமை என்றார் திருவள்ளுவர்.

## பிரிவு - II

(மதிப்பெண் - 10)

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தினுக்கு** விடையளிக்கவும். 5x2=10

21. ஔகாரக்குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

22. மொழியின் வகைகளை கூறுக.

23. அடுக்குத் தொடர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுத் தருக.

24. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

25. "வெற்றிலை" – புணர்ச்சி விதி எழுதுக.

[ திருப்புக

www.usefuldesk.com



www.usefuldesk.com

www.usefuldesk.com



26. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருட்கள் நான்கனை எழுதுக.

27. நேரிசை வெண்பாவின் இலக்கணம் யாது ?

## பிரிவு – III

(மதிப்பெண்கள் : 50)

**குறிப்பு :** பகுதி 3 -ல் வினா எண் 35 -இல் **காது கேளாத மாணவர்களுக்கு மட்டும்** மாற்று வினா வழங்கப்பட்டுள்ளது.

### பகுதி – 1

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டினுக்கு** விடையளிக்கவும். 2x5=10

28. நேரிசை ஆசிரியப்பாவினை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

29. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை
– இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.

**அல்லது**

தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.
ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை, இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

### பகுதி – 2

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் இரண்டிற்கு** ஒவ்வொன்றிற்கும் **அரைப்பக்க** அளவில் விடையளிக்கவும். 2x5=10

31. பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்பற்றினை விளக்குக.

32. அகழாய்வு குறித்த செய்திகளை தொகுத்து எழுதுக.

33. "மெல்ல மெல்ல மற" என்னும் சிறுகதையின் மையக் கருத்தை மாறாமல் சுருக்கி எழுதுக.

www.usefuldesk.com

www.usefuldesk.com



## பகுதி - 3

34. (அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் விரைந்த பாரி, தன் ஸ்கூல் பேக்கைத் தூக்கிப்போட்டுவிட்டு மம்மி வாட்டர் என்று குரல் கொடுத்தான். கை கால்களை வாஷ் செய்துவிட்டு யூனிபார்ம் மாற்றிவிட்டு வா, டிபன் சாப்பிடலாம் என்றாள் அம்மா.

(ஆ) அரபு எண்களுக்கு உரிய தமிழ் எண்களை எழுதுக.

27, 58, 69, 431

35. கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3+2=5

(அ) Early to bed and early to rise make a man healthy, wealthy and wise. The early riser has more time and energy to prepare for the day's work than the late riser. Besides, he finds himself fresh and brisk. Early morning is the most suitable time for study.

(ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டினுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

(1) East or West, home is the best.
(2) Tit for tat
(3) Knowledge is Power
(4) Hearty laugh dispels disease

35. **குறிப்பு :** காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x1=5

அயோத்திதாசப் பண்டிதர் 1845 ஆம் ஆண்டு மே திங்கள் இருபதாம் நாள், சென்னை ஆயிரம் விளக்கில் உள்ள, மக்கிமா நகரில் பிறந்தார். இவரது பெற்றோர் இவருக்குக் காத்தவராயன் என்று பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தனர். பள்ளிக்குச் சென்று கல்வி கற்கும்போது, அவர் பிஞ்சு நெஞ்சில் நஞ்சாய் இறங்கியது தீண்டாமைக் கொடுமை. வீ. அயோத்திதாசப் பண்டிதர் என்பாரிடம் காத்தவராயன் கல்வி கற்றார். சித்த மருத்துவமும் கற்றார். இருபத்தைந்துக்கும் மேற்பட்ட சிறு நூல்களை வெளியிட்டார். தலித்துகளுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவினார். தமது மருத்துவ ஆய்வின் படி, எள் செடியிலிருந்து நெய் கண்டுபிடித்த நாளே தீபாவளி என புதிய விளக்கம் தந்தார்.

(1) அயோத்தி தாசர் எங்கு எப்போது பிறந்தார் ?
(2) காத்தவராயனின் ஆசிரியர் யார் ?
(3) இவரது இயற்பெயர் யாது ?
(4) அயோத்தி தாசர் எத்தனை நூல்களை எழுதி வெளியிட்டார் ?
(5) தீபாவளி என்பதன் புதிய விளக்கம் யாது ?

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com



## பகுதி - 4

36. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். 1x5=5

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.

மலர் தனது தோழி தேன்மொழியுடன் பூங்காவில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது மாலை நான்கு மணி, திடீரென ஏதோ நினைவுக்கு வந்தவளாக எழுந்து நின்ற மலர்.....

**அல்லது**

(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்கு மிகாமல் கவிதை ஒன்று எழுதுக.

முயற்சி அல்லது நட்பு

## பகுதி - 5

37. கீழ்க்காணும் பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களில் **ஏதேனும் ஐந்தினை** எடுத்து எழுதுக. 1x5=5

கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சிய
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் – தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

- பாரதிதாசன்.

www.usefuldesk.com

www.usefuldesk.com

www.usefuldesk.com



## பகுதி - 6

38. முல்லை என்பவர் தனது சேமிப்புக் கணக்கில் ₹ 10,000/- செலுத்துவதற்கு வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னை முல்லையாக நினைத்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. **1x5=5**

## பகுதி - 7

39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்கவும். **3+2=5**

பாண்டியன் ஒவ்வொரு தேர்விலும் அறுபது மதிப்பெண்களுக்குக் குறையாமல் பெறுவான். ஆனால், அவன் தந்தை அம்மதிப்பெண் போதாது என்றும், மேலும் முயற்சி செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்துகிறார். அதிக மதிப்பெண் பெறுவதற்காக அவனைத் தனிப்படிப்புக்கும் அனுப்புகிறார்.

தனிப்படிப்புச் சொல்லித்தருபவரின் பழகுந்தன்மை, அவனுக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் சொன்னால் தனிப்படிப்புக்குச் செல்ல விருப்பமில்லாமல் இவ்வாறு கூறுகிறான் என்று நினைப்பர் என மனத்துயரம் கொள்கிறான்.

1. பாண்டியன் தன் சிக்கலுக்கு எப்படித் தீர்வு காண்பான் ?
2. நீங்கள் பாண்டியனாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?
3. பெற்றோரிடம் சூழ்நிலையைச் சொல்வது சரியா ?

(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்கவும்

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக, அன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள். பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால் கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் கண்டிப்பார்கள். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்று அவன் நினைக்கிறான்.

1. கதிரவன் நண்பர்களுடன் செல்லலாமா ?
2. நீங்களாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

[ திருப்புக

www.usefuldesk.com

www.usefuldesk.com



## பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

40. கீழ்க்காணும் வினாக்களுள் **ஒன்றினுக்கு** விடையளிக்கவும். 1x10=10

(அ) மின் வசதி வேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக.

**அல்லது**

(ஆ) மாற்றுச் சான்றிதழ் வேண்டி உன் பள்ளித் தலைமையாசிரியருக்கு விண்ணப்பம் வரைக.

### பகுதி - 2

41. கீழுள்ள வினாக்களுள் **எவையேனும் ஒன்றினுக்குக்** குறிப்புகளைக் கொண்டு **ஒரு பக்க அளவில்** கட்டுரை ஒன்று எழுதி தலைப்பு ஒன்று தருக. 1x10=10

(அ) நீரின்றி இயங்காது உலகம் – நீர் நிலைகள் அடிப்படை – நீர் பற்றாக்குறை – சேமிக்கும் வழிகள் – மரம் வளர்ப்போம் மழை பெறுவோம்

**அல்லது**

(ஆ) பெண்கல்வி – பெண்ணுரிமை – சமுதாயத்தில் பெண்கள் நிலை – பெண்களுக்கு சொத்துரிமை – பெண் விடுதலை – கல்வியில் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்.

- o 0 o -

www.usefuldesk.com